| | |
|---|---|
| | **தமிழ் நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், சென்னை - 08.**<br>**இரண்டாம் நிலைக் காவலர் (ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல்படை), இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிகளுக்கான பொதுத் தேர்வு - 2022**<br>**அறிவிக்கை எண் - 02 / 2022** |

**நாள்: 30.06.2022**

**1. தேர்வு விவரம் :**

தமிழ் நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், இரண்டாம் நிலைக் காவலர் (ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல்படை), இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிகளுக்கான நேரடி தேர்வு-2022-க்கு (இந்திய குடியுரிமை உடையவர்கள் மட்டும்) விண்ணப்பதாரர்களிடமிருந்து, இணைய வழி விண்ணப்பங்களை (On-line Application) வரவேற்கிறது. ஊதிய விகிதம் ரூ.18,200 - 67,100.

**இத்தேர்வுக்கான முக்கிய நாட்கள்**

| | | |
|---|---|---|
| i. | அறிவிக்கை நாள் | 30.06.2022 |
| ii. | இணைய வழி விண்ணப்பம் சமர்பிப்பதற்கான ஆரம்ப நாள் | 07.07.2022 |
| iii. | இணைய வழி விண்ணப்பம் சமர்பிப்பதற்கான கடைசி நாள் | 15.08.2022 |
| iv | எழுத்துத் தேர்வுகள் நடைபெறும் நாள் | பின்னர் அறிவிக்கப்படும் |

**2. மொத்த காலிப்பணியிடங்கள் :** 3,552

| துறை | பதவி | பொது / ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| காவல்துறை | இரண்டாம் நிலைக் காவலர் (மாவட்ட / மாநகர ஆயுதப்படை) | 1,526 | 654 | 2,180 |
| | இரண்டாம் நிலைக் காவலர் (தமிழ்நாடு சிறப்புக் காவல் படை) | 1,091 | -- | 1,091 |
| சிறை மற்றும் சீர்திருத்தத் துறை | இரண்டாம் நிலை சிறைக் காவலர் | 153 | 8 | 161 |
| தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை | தீயணைப்பாளர் | 120 | -- | 120 |
| **மொத்தம்** | | **2,890** | **662** | **3,552** |

www.freejobsportal.in

**3. சிறப்பு ஒதுக்கீடுகள்:**

| ஒதுக்கீட்டு விவரம் | மொத்த காலிப்பணியிடங்களில் ஒதுக்கீட்டு சதவீதம் | தகுதிகள் |
|---|---|---|
| விளையாட்டு | 10% | அங்கீகரிக்கப்பட்ட 16 விளையாட்டுப் போட்டிகளில் தேசிய / தமிழகம் சார்பாக மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் தமிழக பல்கலைக்கழகங்கள் சார்பாக பங்கு பெற்றவர்கள். |
| முன்னாள் இராணுவத்தினர் | 5% | இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட தேதியில் இருந்து மூன்றாண்டுகள் நிறைவு செய்யாதவர்கள் மற்றும் விண்ணப்பம் பெறப்படும் கடைசித் தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வு பெறவுள்ளவர்கள். |
| ஆதரவற்ற விதவைகள் | 3% | வருவாய் கோட்ட அலுவலர் (RDO) /சார் ஆட்சியர் (Sub-Collector) / உதவி ஆட்சியர் (Assistant Collector) அவர்களிடமிருந்து சான்றிதழ் பெற்ற ஆதரவற்ற விதவைகள். |

**குறிப்பு:**

i. சிறப்பு ஒதுக்கீட்டில் தேர்வு செய்திட தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் இல்லாவிடில், அந்தக் காலிப்பணியிடங்கள், பொது ஒதுக்கீட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டு வகுப்பு வாரியாகத் தேர்வு செய்யப்படுவார்கள்.

ii. ஒவ்வொரு சிறப்பு ஒதுக்கீட்டிலும், தற்போது நடைமுறையிலுள்ள அரசு விதிகளின் அடிப்படையில் வகுப்பு வாரி இட ஒதுக்கீடு பின்பற்றப்படும்.

**4. தமிழ் வழியில் பயின்றவர்களுக்கான முன்னுரிமை (PSTM) :**

மொத்த காலிப் பணியிடங்களில் 20% பணியிடங்கள், முதலாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை தமிழ் மொழியை பயிற்று மொழியாகக் கொண்டு பயின்றிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு தேர்வின் ஒவ்வொரு நிலையிலும் 20% முன்னுரிமை அளிக்கப்படும்.

**5. வயது :**

அனைத்துப் பதவிகளுக்கும் விண்ணப்பிப்போருக்கான வயது வரம்பு:

| | | |
|---|---|---|
| i | பொதுப் பிரிவினிர் (OC) | 01.07.2022 அன்று, 18 வயது நிறைவுற்றவராகவும், 26 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (01.07.1996-லிருந்து 01.07.2004-க்குள் பிறந்திருக்க வேண்டும்). |
| ii. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC) / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர் BC(M)) / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் (MBC/DNC) | 01.07.2022 அன்று, 18 வயது நிறைவுற்றவராகவும், 28 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (01.07.1994-லிருந்து 01.07.2004-க்குள் பிறந்திருக்க வேண்டும்). |


www.freejobsportal.in

| | | |
|---|---|---|
| iii. | ஆதிதிராவிடர் (SC) / ஆதிதிராவிடர் (அருந்ததியர் SC(A)) / பழங்குடியினர் (ST) | 01.07.2022 அன்று, 18 வயது நிறைவுற்றவராகவும், 31 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (01.07.1991-லிருந்து 01.07.2004-க்குள் பிறந்திருக்க வேண்டும்). |
| iv. | மூன்றாம் பாலினத்தவர் | 01.07.2022 அன்று, 18 வயது நிறைவுற்றவராகவும், 31 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (01.07.1991-லிருந்து 01.07.2004-க்குள் பிறந்திருக்க வேண்டும்). |
| v. | ஆதரவற்ற விதவைகள் | 01.07.2022 அன்று, 18 வயது நிறைவுற்றவராகவும், 37 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (01.07.1985-லிருந்து 01.07.2004-க்குள் பிறந்திருக்க வேண்டும்). |
| vi. | முன்னாள் இராணுவத்தினர் மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசித் தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவத்தினர் | 01.07.2022 அன்று, 47 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும். (01.07.1975-லிருந்து 01.07.2004-க்குள் பிறந்திருக்க வேண்டும்). |

**6. <u>கல்வித் தகுதி</u> :**

**குறைந்தபட்சம் 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.**

**7. <u>இடஒதுக்கீடு</u> :**

**வகுப்பு வாரி இடஒதுக்கீடு நடைமுறையில் உள்ள விதிகளின்படி பின்பற்றப்படும். தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ் பெற்றவர்கள் மட்டுமே வகுப்புவாரி ஒதுக்கீட்டில் பரிசிலீக்கப்படுவார்கள்.**

| | |
|---|---|
| பொதுப் பிரிவினர் (OC) | 31% |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC) | 26.5% |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) (BC(M)) | 3.5% |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் (MBC/DNC) | 20% |
| ஆதிதிராவிடர் (SC) | 15% |
| ஆதிதிராவிடர் (அருந்ததியர்) (SC(A)) | 3% |
| பழங்குடியினர் (ST) | 1% |

**8. <u>பதவி விருப்ப முன்னுரிமை</u> :**

முழுமையான விவரங்கள் தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன.

www.freejobsportal.in

**9. <u>தேர்வு நிலைகள்</u> :**

| வ,எண் | தேர்வு நிலைகள் | விவரம் |
|---|---|---|
| a. | எழுத்துத் தேர்வு | **பிரிவு - I** தமிழ் மொழித் தகுதித் தேர்வு : 80 மதிப்பெண்கள் (கொள்குறிவகை)<br>**பிரிவு** - II முதன்மை எழுத்துத் தேர்வு : 70 மதிப்பெண்கள் (கொள்குறிவகை) |
| b. | உடற்கூறு அளத்தல் | உடற்கூறு அளத்தல் மற்றும் உடற்தகுதித் தேர்வு ஆகியன தகுதித் தேர்வுகள் மட்டுமே. அதற்கு மதிப்பெண்கள் கிடையாது. |
| c. | உடற்தகுதித் தேர்வு | |
| d. | உடல்திறன் போட்டிகள் | உடற்திறன் போட்டிகளுக்கான அதிகபட்ச மதிப்பெண்கள் - 24.<br>விண்ணப்பதாரர்கள் அனைத்து உடல்திறன் போட்டிகளிலும் பங்குபெற வேண்டும். |
| e. | சிறப்பு மதிப்பெண்கள் | தேசிய மாணவர் படை, நாட்டு நலப் பணித் திட்டம் மற்றும் விளையாட்டு போடடிகள் ஆகியனவற்றிக்கு தலா 2 மதிப்பெண்கள்.<br>அதிகபட்சம் 6 மதிப்பெண்கள். |
| | **மொத்தம்** | 100 மதிப்பெண்கள் |

தமிழ் மொழித் தகுதித் தேர்வில் குறைந்தபட்சம் 32 மதிப்பெண்கள் (40%) பெற்ற விண்ணப்பதாரர்களுடைய, முதன்மை எழுத்துத் தேர்வின் OMR விடைத்தாள்கள் மட்டுமே மதிப்பீடு செய்யப்படும்.

முதன்மை எழுத்துத் தேர்வில் தகுதி மதிப்பெண்ணாக குறைந்தபட்சம் 25 மதிப்பெண்கள் (35%) பெற வேண்டும். விண்ணப்பதாரர்களின் அதிகபட்ச மதிப்பெண்கள் அடிப்படையில் அடுத்த கட்டத் தேர்வான அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தல், உடற்கூறு அளத்தல், உடற்தகுதித் தேர்வு மற்றும் உடற்திறன் போட்டிகளுக்கு மொத்தக் காலிப்பணியிட எண்ணிக்கையில் 1 : 5 என்ற விகிதாச்சாரப்படி அழைக்கப்படுவார்கள்.

**10. <u>எழுத்துத் தேர்வு மையம்</u> :**

எழுத்துத் தேர்வுக்கான தேர்வுக்கூட சீட்டில் எழுத்துத் தேர்வு மைய விவரம் தெரிவிக்கப்படும். இவ்வாரியத்திற்கு எழுத்துத் தேர்வுக்கான மையங்களின் எண்ணிக்கையை கூட்டவும், குறைக்கவும் அல்லது ஒரு விண்ணப்பதாரரை வேறு மையத்திற்கு நிர்வாக காரணத்தினால் மாற்றவும் உரிமை உண்டு. விண்ணப்பதாரர் தேர்வுகூட சீட்டில் குறிப்பிட்டுள்ள தேர்வு மையத்தில் மட்டுமே தேர்வு எழுத வேண்டும்.

**11. <u>தேர்வுக்கட்டணம்</u> :**

ரூ.250/- தேர்வுக் கட்டணத்தை இணையதள வழி (இணையதள வங்கி / வங்கி கடன் அட்டை / வங்கி பற்று அட்டை / UPI ) மற்றும் இணையமில்லா வழியில். SBI வங்கியின் செலுத்துச் சீட்டு மூலமும் செலுத்தலாம்.

**12. <u>இணையவழி விண்ணப்பம்</u> :**

விண்ணப்பதாரர்கள் இவ்வாரியத்தின் இணையதளமான www.tnusrb.tn.gov.in மூலமாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். ஏனைய இதர வழிகளில் விண்ணப்பித்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும். எழுத்துத் தேர்வுக்கான தேர்வுக்கூட சீட்டை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செயதுகொள்ளலாம். தபால் மூலமாக தேர்வுக்கூட சீட்டு அனுப்பப்பட மாட்டாது.

www.freejobsportal.in

**13. <u>தற்காலிகத் தேர்வு</u> :**

விண்ணப்பதாரர்கள் எழுத்து தேர்வு, உடல்திறன் தேர்வு மற்றும் சிறப்பு மதிப்பெண்கள் ஆகியவற்றில் பெற்ற மொத்த உயர்ந்தபட்ச மதிப்பெண்களின் அடிப்படையிலும், விண்ணப்பதாரர்கள் தெரிவித்துள்ள பதவி விருப்ப முன்னுரிமைப்படியும், காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப வகுப்பு வாரி விகிதாச்சார அடிப்படையில், வகுப்பு வாரி சுழற்சி முறையிலும் மாவட்ட / மாநகர ஆயுதப்படை அல்லது தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அல்லது இரண்டாம் நிலை சிறைக் காவலர் அல்லது தீயணைப்பாளர் பதவிக்கு தற்காலிகமாகத் தேர்வு செய்யப்படுவார்கள்.

**14.<u>மருத்துவப் பரிசோதனை, முந்தைய குற்ற நடவடிக்கைகள் & குணநலன்கள் குறித்த விசாரணை</u> :**

இரண்டாம் நிலைக் காவலர் (மாவட்ட / மாநகர ஆயுதப்படை மற்றும் தமிழ் நாடு சிறப்புக் காவல் படை), இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிகளுக்கு தற்காலிகமாகத் தேர்வு செய்யப்படுபவர்கள், மருத்துவப் பரிசோதனைக்கும், முந்தைய குற்ற நடவடிக்கைகள் மற்றும் குணநலன்கள் குறித்த காவல் துறை விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

**15. <u>தகவல் சிற்றேடு</u> :**

இத்தேர்விற்கான கூடுதல் தகவல்கள், பாடத்திட்டங்கள், எழுத்துத் தேர்விற்கான மாதிரி வினாத்தாள்கள், உடற்கூறு அளத்தல், உடற்தகுதித் தேர்வு மற்றும் உடற்திறன் போட்டிகளுக்கான விதிமுறைகள் ஆகியவை தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் இவ்வாரிய இணையதளமான www.tnusrb.gov.in -ல் இருந்து தகவல் சிற்றேட்டைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**16.** விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கு முன்னர், இவ்வாரிய இணையதளத்திலுள்ள தகவல் சிற்றேட்டினை படித்து அனைத்து விவரங்களையும் அறிந்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

உறுப்பினர் செயலாளர்
தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்,
சென்னை -08.

www.freejobsportal.in